**செய்தி வெளியீடு எண்:662** **நாள் : 12.12.2015**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**

**பொது சுகாதாரத்துறையின் மூலம் சென்னையில் வெள்ளம் பாதித்த பகுதிகளில் கொசுக்கள் மற்றும் ஈக்கள் பெருகுவதை தடுக்க புகை மருந்து அடித்தல் மற்றும் மருந்து தெளித்தல் பணிகள் மும்முரம்!**

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை மற்றும் புறநகர் வெள்ளம் பாதித்த பகுதிகளில் தொற்று நோய் பரவாமல் தடுக்க பல்வேறு மருத்துவ முகாம்களும், நடமாடும் மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த முகாம்களின் மூலம் பெண்களின் சுகாதாரத்தை பேணிக்காக்கும் பொருட்டு சானிடரி நாப்கின்களும், நீரினால் பரவும் வயிற்றுப்போக்கு நோய்களை தடுக்கும் வகையில் ORS கரைசல் பாக்கெட்டுகளும் வழங்கப்பட்டு வருகின்றன, மேலும் ஆட்டோக்கள் மூலமும் தினசரி வீடு வீடாக சென்று பிளிச்சீங் பவுடர் மற்றும் குளோரின் மாத்திரைகள் பொது சுகாதார ஆலோசனைகள் அடங்கிய துண்டு பிரசுரங்களும் தீவிரமாக வழங்கப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக இன்று முதல் (12.12.2015) வெள்ளம் பாதித்த பகுதிகளில் கொசுக்கள் உற்பத்தியாவதை தடுக்க கொசுப்புழு ஒழிப்புப்பணிகள் மற்றும் கொசு மற்றும் ஈக்கள் ஒழிப்பு புகைமருந்து அடிக்கும் பணிகள் தொடங்கப்பட்டது.

இப்பணியை மழை வெள்ளம் பாதிக்கப்படாத மாவட்டங்களில் உள்ள 18 மண்டல மற்றும் மாவட்ட பூச்சியியல் வல்லுனர்கள் அடங்கிய குழுக்கள் அமைக்கப்பட்டு 18 குழுக்களும் தனித்தனியாக பிரிந்து வீடு வீடாக சென்று கொசுக்கள் உற்பத்தியாகும் தேங்காய் சிரத்தைகள், ஆட்டுக்கல், டயர் மற்றும் தேவையில்லாத தண்ணீர் தேங்கும் பொருட்களை அப்புறப்படுத்தி கொசு மருந்து புகை அடிப்பார்கள். மேலும் வீடுகளில் தேக்கி வைக்கப்பட்டுள்ள தண்ணீர் தொட்டிகளில் கொசு புழுக்கள் உருவாகுவதை தடுக்கும் டெமிபாஸ் (Temephos) மருந்து தெளிக்கும் பணியிலும், சுற்றுபுறப்பகுதிகளில் ஈக்கள் பரவாமல் தடுக்க ஈக்கள் ஒழிப்பு மருந்து தெளிக்கும் பணியிளும் ஈடுபடுவார்கள். பொதுமக்களுக்கு கொசுக்கள் வராமல் தடுக்கும் வழிமுறைகள் குறித்து துண்டு பிரசுரம் மூலம் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்வார்கள்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் இன்று (12.12.2015) அரசு ஓமந்துரார் பன்னோக்கு மருத்துவமனை வளாகத்தில் 18 பூச்சியியல் வல்லுநர் தலைமையில் வந்துள்ள குழுக்களையும், புகை மருந்து தெளிக்கும் இயந்திரங்களையும் பார்வையிட்டு தக்க ஆலோசனைகள் வழங்கினார்கள்.

உடன் மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் இஆப., தேசிய மருத்துவ ஆராய்ச்சி கழக தலைமை இயக்குநர் டாக்டர் சௌம்யா சாமிநாதன், பொது சுகாதார மற்றும் நோய் தடுப்பு மருந்துகள் துறை இயக்குநர் டாக்டர் கே. குழந்தைசாமி, கூடுதல் இயக்குநர் டாக்டர். வடிவேலன், இணை இயக்குநர் சரவணன் மற்றும் சுகாதாரத்துறை உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**